# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● அக்டோபர் 22 2022

Weekly E-paper ● October 22, 2022


## தீபாவளியும் திமுக அரசும்!

சுப.வீரபாண்டியன்



### அன்று துப்பாக்கி! இன்று தீர்மானம்!!

பேராசிரியர் அ.இராமசாமி

### பாவம் எடப்பாடி!

தலையங்கம்

### இரண்டு ஆணையங்கள்! குற்றவாளிகள் யார், யார்?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● அக்டோபர் 22 2022 Weekly E-paper ● October 22, 2022


# தீபாவளியும் திமுக அரசும்!

**சுப.வீரபாண்டியன்**

திமுக தலைமையிலான தமிழ்நாடு அரசு தீபாவளிக்கு ஏன் வாழ்த்து சொல்வதில்லை என்று ஒரு சாரார் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்!

வாழ்த்து என்பது கேட்டுப் பெறுவதற்கு உரியதன்று என்பது ஒரு புறம் இருந்தாலும், எல்லோருக்கும் பொதுவான தமிழ்நாடு அரசு இந்து மத விழாவிற்கு ஏன் வாழ்த்து சொல்லவில்லை என்னும் கேள்விக்கு நாம் விடை சொல்ல வேண்டித்தான் இருக்கிறது.

இந்தக் கேள்விக்கு ஓர் உள்நோக்கமும் உண்டு. தீபாவளியின் மீதோ, இந்து மதம், கடவுள்கள் மீதோ கொண்ட பற்றினால் இந்தக் கேள்வி எழுப்பப்படவில்லை. இதன் மூலமாகத் திமுக இந்துக்களுக்கு எதிரானது என்பது போன்ற ஒரு பொய்த் தோற்றத்தை ஏற்படுத்தி, இந்து மக்களின் வாக்குகள் திமுகவுக்குச் செல்லாமல் தடுப்பதுதான் உள்ளிருக்கும் அரசியல் நோக்கம் ஆகும்.

ஏன் வாழ்த்து சொல்லவில்லை என்னும் கேள்விக்கு விடை சொல்வதற்கு முன்பாக, தமிழ்நாடு அரசு இந்துக்களுக்கு எதிராகச் செயல்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

இதே தீபாவளிக்கு மிகக் கூடுதலாகப் பேருந்துகளைத் தமிழ்நாடு அரசுதான் ஏற்பாடு






செய்திருக்கிறது. தீபாவளியைக் கொண்டாட ஊருக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு அலுவலக விடுமுறை அளித்திருப்பதோடு, பேருந்து வசதிகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

24ஆம் தேதி தொடங்கி, திருச்செந்தூரில் ஒரு வாரம் நடைபெறவிருக்கும் கந்த சஷ்டி விழாவிற்குத் தேவையான முன்னேற்பாடுகளை இப்போதே அரசு செய்யத் தொடங்கிவிட்டது. பக்தர்கள் தங்குவதற்கான இட வசதி, குடிநீர், கழிப்பறைகள், மருத்துவ முதலுதவிக்கான திட்டங்கள் அனைத்தும் அங்கே ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன!

எல்லா இந்து மத விழாக்களுக்கும் இது போன்ற முன்னேற்பாடுகளைத் தமிழ்நாடு அரசு செய்துதான் வருகின்றது. எனவே இந்துக்களுக்கு எதிரானது இந்த அரசு என்பதில் உண்மையும் இல்லை, அதனை இந்துக்கள் என்று தங்களை எண்ணிக் கொண்டிருக்கும் மக்கள் நம்பவும் இல்லை! ஆகவேதான் பாஜக போன்ற கட்சிகளின் பொய்ப் பரப்புரைகளைப் புறந்தள்ளிவிட்டு மக்கள் திமுகவிற்கு வாக்களிக்கின்றனர்!

சரி இது போகட்டும், ஏன் தீபாவளிக்கு முதலமைச்சர் வாழ்த்து சொல்வதில்லை என்று கேட்கின்றனர். பெரும்பான்மையான இந்துப் பண்டிகைகள் எந்த அடிப்படையில் நடக்கின்றன என்று பார்க்கலாம். நரகாசுரன் என்னும் அரக்கன் கொல்லப்பட்டதால் தீபாவளி கொண்டாடப்படுகிறது. மகிஷாசுரன் என்னும் ஒருவரை துர்க்கை அழித்து விட்டதால் நவராத்திரி விழா எடுக்கப்படுகிறது. முருகன் சூரபத்மனை சம்ஹாரம் செய்து விட்டார் என்றுதான் சூரசம்கார விழா நடத்தப்படுகிறது. இப்படி இன்னும் பல!

இவை எல்லாவற்றிலும் ஓர் ஒற்றுமை இருப்பதை நம்மால் பார்க்க முடியும். யாராவது ஒருவன் இன்னொருவரால் கொல்லப்படுவதுதான் விழாவிற்கான அடித்தளமாக இருக்கிறது! கொல்லப்பட்டவர்கள் எல்லோரும் யார் யார்? பிற மதத்தினரா அல்லது பிற நாட்டினரா? நரகாசுரன் இஸ்லாம் மதத்தைத் தழுவியவரா? மகிஷாசுரன் ஐரோப்பாவில் இருந்து இங்கு வந்தவரா? எதுவும் இல்லை. எல்லோரும் இந்துக்களே!

அப்படியானால் ஒரு மதத்திற்கு உள்ளேயே நடந்த இரு பிரிவினருக்கு இடையிலான மோதல்தான் இவை எல்லாம். இன்றைய ஊடக மொழியில் சொல்வதானால் இவை அனைத்தும் "கோஷ்டி மோதல்கள்''. இந்த கோஷ்டி மோதலில் சிலர் கொல்லப்பட்டு விட்டதைக் கொண்டாடுவதும் கொண்டாடாமல் இருப்பதும், வாழ்த்து சொல்வதும், சொல்லாமல் இருப்பதும் அவரவர் விருப்பமும் உரிமையும் அல்லவா!

அடுத்தவன் சாவைக் கொண்டாட வேண்டாம் என்று நினைப்பது நல்ல பண்புதானே – கொல்லப்பட்டவன் யாராக இருந்தாலும்!

இன்னொன்றையும் இங்கு நாம் பார்க்கலாம். தீபாவளி கொண்டாடும் எல்லோரும் நரகாசுரன் கொல்லப்பட்ட கதையை நம்பியா இன்று கொண்டாடுகின்றனர்? விடுமுறை கிடைக்கிறது, சில நிறுவனங்களில் போனசும் கிடைக்கிறது, ஊருக்குச் செல்லலாம் உறவினர்களைப் பார்க்கலாம், இனிப்பு தின்னலாம், வெடி வெடிக்கலாம், மகிழ்ச்சியாக இருக்கலாம் என்னும் இயல்பான கொண்டாட்ட மனநிலைதான் மக்களிடம் இன்று மிஞ்சி இருக்கிறது!

நரகாசுரனை மக்கள் மறந்து நாளாகிவிட்டது! இன்று தீபாவளி என்பது ஒரு கேளிக்கைக்கான விழா! அதற்குத் தமிழ்நாடு அரசு வாழ்த்து சொல்லியே ஆக வேண்டும் என்பது என்ன தேவை!?!

●

# படிப்படியான மாற்றம்! முன்னேற்றம்!

ஜனனி



பொதுவாக, பெண்கள் தொடர்பான முற்போக்கான முன்னெடுப்புகள் சட்ட வடிவிலோ, அறிவியல் வடிவிலோ வரும் போது சமூகத்தில் ஒரு அதிர்வு அலை ஏற்படுவதைக் காண முடிகிறது.

பெண்களின் திருமண வயது, 8 வயதிலிருந்து உயர்த்தப்பட்டுப் படிப்படியாக இன்று 21ஆக உயர்த்தப்படும் காலம் வரை சமூக எதிர்ப்பு பெரிய அளவில் காணப்படுகிறது. சிதம்பரத்தில் சிறுமிகளைத் திருமணம் செய்த தீட்சிதர்களை ஒட்டுமொத்தச் சமூகமும் எதிர்ப்பதை நாம் பார்க்கிறோம். அதேநேரம் பெண்கள் திருமண வயதைச் சட்டபூர்வமாக உயர்த்துவதையும் எதிர்ப்பதைப் பார்க்கிறோம். அதேபோல் தற்போது வாடகைத்தாய் பற்றிய விவாதங்கள் எழுகின்றன.

திரைத்துறையைச் சார்ந்தவர்கள் வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்றிருப்பார்களோ என்கிற யூகத்தை ஒட்டி நிறைய விவாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. வாடகைத் தாய் முறை பல ஆண்டுகளாக இந்தச் சமூகத்தில் இருந்து வருகிறது. இது குறித்து 2001 ஆம் ஆண்டு "கண்டேன் சீதையை" என்ற படமும் வந்துள்ளது. நாம் அன்றாடம் பார்க்கும் நாளிதழ்களிலும் வாடகைத் தாய் முறை பற்றி அறிகிறோம். "மகனின் குழந்தையைச் சுமக்கும் தாய்", "அண்ணனின் குழந்தையைச் சுமக்கும் தங்கை" என்ற தலைப்புகளோடு செய்திகள் வெளி வருகின்றன. ஒரு நடிகையின் தனிப்பட்ட வாழ்க்கை அதில் சம்பந்தப்படும் போது இதற்கு விளம்பரம் தானாகக் கிடைத்துவிடுகிறது.

உடல் ரீதியாக இதில் வாடகைத்தாய் சுரண்டப்படுகிறார் என்பது முதன்மையான வாதமாக முன் வைக்கப்படுகிறது. இது 'தாய்மை' சந்தையாகி விடக்கூடாது என்ற அச்சத்தின் வெளிப்பாடாகவே தெரிகிறது. தாய்மை சந்தையானால் 'தாய்மையைப் போன்ற புனிதம் உலகத்தில் வேறு ஒன்றும் இல்லை', 'பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்' என்ற தாய்மை குறித்த வசனங்கள் கூறி பெண்களை அடிமைப்படுத்த முடியாது. தாய்மையின் மீதான பிம்பம் உடையும். வாடகைத் தாய் முறை பரவலாக்கப்பட்டு *Commercial Surrogacy* வந்துவிட்டால், ஜாதிய அமைப்பில் இயற்கையாகவே விரிசல் ஏற்படும். மத அடிப்படைவாதங்களும் சடங்குகளும் கேள்விக்குள்ளாகும். வளைகாப்பு யாருக்கு நடத்தப்படும்.

ஒரு சமூகத்தில் மாற்றம் படிப்படியாகத்தான் வரும். தன் வாரிசை, செயற்கைக் கருத்தரித்தல் வழியாக எப்பாடுபட்டாவது தன் மனைவிதான் சுமக்க வேண்டும் என்பதிலிருந்து நகர்ந்த, அடுத்த படிதான் வாடகைத் தாய் முறை. குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கும் மனப்பான்மை சமூகத்தில் வருவதற்கு வாடகைத்தாய் முறை ஒரு அடித்தளம்.

இது இரு தரப்பினருக்கிடையேயான ஒப்பந்தம். மற்றவர்களுக்கு என்ன கவலை?

"என்னதான் இருந்தாலும் வாடகைத் தாய் முறையில் உழைப்புச் சுரண்டல் இருக்கிறது" என்று சொல்பவர்களுக்கு நாம் சொல்வது :- "உழைப்புச் சுரண்டலைத் தடுக்க முதலாளித்துவக் கட்டமைப்பை எதிர்த்து, பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்!" ●

# அன்று துப்பாக்கி! இன்று தீர்மானம்!!

**பேராசிரியர் அ.இராமசாமி**
துணைத் தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

**"என்று முடியும் இந்த மொழிப்போர்?", "Struggle for Freedom of Languages in India" ஆகிய நூல்களின் ஆசிரியராக, இன்றும் தொடரும் இந்தித் திணிப்பை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

இந்தித் திணிப்பை இரண்டு விதமாகப் பார்க்கலாம். ஒன்று இந்தி படிப்பது. இன்னொன்று இந்தியை ஆட்சி மொழியாக ஏற்பது. இந்தி படிப்பதில் நமக்கு எந்தத் தடையும் இல்லை. கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று சொல்லும் போதுதான் ஆட்சேபணை வருகிறது. இந்தியைத் திணிக்க வேண்டும் என்பதற்காகக் கட்டாயப்படுத்துவதைத்தான் நாம் எதிர்க்கிறோம்.

அதேபோல் இந்தி ஆட்சி மொழியாக இருப்பதில் நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்பதுதான் பிரச்சனை. எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று நாம் கேட்கிறோம். 22 மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கலை அன்று பிரதமர் நேரு சொன்னார். ஆனால் இன்று தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. ஒரு செய்தியை ஒரு நொடியில் பல மொழிகளிலும் கொண்டு வந்துவிடலாம். அதனால் அந்த 22 மொழிகளையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று கேட்கிறோம். 'தமிழ்' ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது கோரிக்கை.

பயிற்றுமொழி "Medium of Instruction" இந்தியில் கொண்டு வருவது என்பதில் நமக்கு ஆட்சேபணை இல்லை - இந்தி பேசுகிற மாநிலங்களில். மத்தியப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டில் திருவாரூரில் ஒன்று இருக்கிறது. அங்கே பயிற்று மொழியாக இந்தியைக் கொண்டு வருவதை நாம் எதிர்க்கிறோம்.

**இந்தித் திணிப்பிற்கு எதிராக, தமிழக சட்டசபையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பற்றிய உங்கள் கருத்து.**

ஒரு மாநில அரசு ஒன்றிய அரசின் கொள்கையை எதிர்ப்பதே ஒரு பெரிய செய்தி. 1965இல் நாங்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்திய போது, மாநில அரசு தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப வேண்டும் என்றுதான் சொன்னோம். அப்போது மாநில அரசு, துப்பாக்கியை எங்கள் முன் காட்டியது. இன்று அந்த நிலை இல்லை. மாநில அரசே இந்தியை எதிர்ப்பது என்பது ஒரு பெரிய அடி. உலக அளவில் இது கவனிக்கப்படும். நீட் தேர்வை நாம் மட்டும்தான் எதிர்க்கிறோம். அவர்களால் நம்மை அமைதியாக்க முடியவில்லை. ஒரு மாநில அரசு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினால், அது நடந்து விடுமா என்றால், நடக்கும். காத்திருப்போம். காலம் வரும்.

நேர்காணல் : **மா.உதயகுமார்**



*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பாவம் எடப்பாடி !

எடப்பாடி பழனிச்சாமி அணி என்றும், ஓ.பன்னீர்செல்வம் அணி என்றும் இரண்டு அணிகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன, அ.தி.மு.கவில். அது மட்டும் இல்லாமல் சசிகலா என்றும், டி.டி.வி.தினகரன் என்றும் கொசுறுகளும் கூட அங்கே இருக்கின்றன.

அவையெல்லாம் நமக்குத் தேவையில்லை. அது குறித்துப் பேசப்போவதும் இல்லை. அது அவர்கள் உள்கட்சிப் பிரச்சனை.

ஆனால், 18-10-2022 அன்று காலை தமிழக சட்டமன்றக் கேள்வி நேரத்தின் போது அவையை நடத்தவிடாமல் கூச்சல் குழப்பம் செய்த எடப்பாடி அணியினரை வெளியேற்றினார் அவைத்தலைவர் அப்பாவு அவர்கள்.

வெளியேற்றப்பட்ட எடப்பாடி, செய்தியாளர்களிடம் “முதல் அமைச்சரின் ஆணைக்கிணங்க ஓ.பி.எஸ்.சுக்கு ஆதரவாக சபாநாயகர் அப்பாவு செயல்படுகிறார். இது அநீதி. ஓ.பி.எஸ்-யை பிடீமாக பயன்படுத்தி அ.தி.மு.க.வை வீழ்த்த மு.க.ஸ்டாலின் திட்டமிடுகிறார்” என்றார்.

மறுநாள் வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் போது, முதல்வர் ஸ்டாலினுடன் ஓ.பன்னீர்செல்வம் அரை மணி நேரம் ரகசியம் பேசினாராம்.

அதற்குப் பன்னீர் செல்வம் ஒன்று நிரூபி, அல்லது அரசியலை விட்டு வெளியேறு என்று காட்டமாகப் பதில் சொன்னார். அதற்கு இதுவரை பழனிச்சாமியிடம் இருந்து பதிலே வரவில்லை.

பிரச்சனை இதுதான். எடப்பாடியின் அணியைச் சேர்ந்த உதயகுமாரை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக அங்கீகரிக்கச் சொன்னார் எடப்பாடி.

விதிகளுக்கு உள்பட்டு அதை ஏற்க மறுத்தார் பேரவைத் தலைவர். இதை முன் கூட்டியே அலுவல் ஆய்வுக் குழுவின் போதே அவர் தெரிவித்துவிட்டார்.

ஆனாலும் அமளி,ஆர்ப்பாட்டம் என்பதோடு, எந்த ஆதாரமும் இல்லாமல் தி.மு.க மீது குற்றம் சொல்லிவிட்டார் எடப்பாடி.

உண்மை என்னவென்றால் ஆறுமுகச்சாமி ஆணைய அறிக்கையும், அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையும் பேரவையில் வைக்கப்படும் போது அதன் ‘சூட்டை’த் தாக்குபிடிக்க முடியாது என்பதனால் உப்புக்கும், புளிக்கும் உதவாத ஒரு நாடகத்தை நடத்தி அவையை விட்டு வெளியேறிவிட்டார் எடப்பாடி.

அதற்காக அவர் கையாளும் அரைவேக்காடு அரசியல் நாடகம்தான் தி.மு.க மீது பழிபோடுவது.

கயிறு எட்டும் வரைதான் ஓட முடியும். அதன் பின்னர் வட்டத்தை விட்டு வெளியே போக முடியாது.

மக்களுக்கான அரசியல் செய்வதை விட்டுவிட்டு, தி.மு.க மீது பழிபோடும் “தனிநபர்” அரசியல்வாதியாக மாறி விட்டார், பாவம் எடப்பாடி!



## பேரறிஞர் அண்ணாவை இழிவாகப் பேசிய ‘பத்ரியே’ மன்னிப்புக் கேள்!

## காவேரி அம்மையார் காலமானார்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அமைப்புச் செயலாளர் காசு. நாகராசன் அவர்களின் அன்னையார் காவேரி அம்மையார் அவர்கள் 15 - 10 - 2022 அன்று தன் 82ஆம் வயதில் காலமானார். முற்போக்குச் சிந்தனைகளை நெஞ்சில் தாங்கிய அவர், திராவிட இயக்கக் கொள்கையாளர், தந்தை பெரியாரை ஏற்றுக் கொண்டவர். இறுதி ஊர்வலத்தின் போது பெண்கள் மட்டுமே அவரின் உடலைத் தாங்கிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அம்மையாரின் உடல், அவர் விருப்பப்படி கோவை அரசு மருத்துவமனைக்கு உடற்கொடை கொடுக்கப்பட்டது. திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் நமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com

மின் அஞ்சல்: karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# இரண்டு ஆணையங்கள்!

# குற்றவாளிகள் யார், யார்?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

முன்னாள் முதல்வர் ஜெ.ஜெயலலிதா மர்ம மரணம் குறித்து விசாரித்த நீதியரசர் ஆறுமுகச்சாமி ஆணையம் மற்றும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டக்காரர்கள் மீதான துப்பாக்கிச் சூடு குறித்து விசாரித்த நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையம் ஆகியவற்றின் அறிக்கைகள் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 18.10.2022 அன்று தாக்கல் செய்யப்பட்டது. அதன் அம்சங்கள் எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டதால் அதை எதிர்கொள்ள அச்சமுற்ற பழனிச்சாமி தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அணி எதிர்கட்சித் துணைத் தலைவர் இருக்கை விவகாரத்தை முன் வைத்து சட்டப் பேரவையில் அமளி செய்து வெளியேறினர்.

சுமார் 5 ஆண்டுகளாக 158 பேரிடம் விசாரணை நடத்திய நீதியரசர் ஆறுமுகச்சாமி ஆணையம் அளித்த 611 பக்க அறிக்கையின் முடிவுரையில் சசிகலா, கே.எஸ்.சிவக்குமார், அப்போதைய சுகாதாரத்துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர். அப்போதைய சுகாதாரத்துறைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், அப்பல்லோ நிறுவனர் டாக்டர் பிரதாப் ரெட்டி, அப்போதைய தலைமைச் செயலாளர் ராம மோகன் ராவ், மருத்துவர்கள் Y.V.C ரெட்டி, பாபு ஆபிரகாம் ஆகியோர் விசாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்” (948)**

என்கிறது வள்ளுவம். நோய் என்ன? நோயின் காரணம் என்ன? நோய் தீர்க்கும் வழி என்ன? இவற்றை முறையாக ஆராய்ந்து சிகிச்சை செய்ய வேண்டும் என்கிறார் வள்ளுவர். (உடல் நோய்க்கு மட்டுமின்றிச் சமுதாய நோய்க்கும் இது பொருந்தும்)

**“காலாழ் களரில் நரியிடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்தக் களிறு “ (500)**

என்றும் வள்ளுவர் கூறுகிறார். அதாவது வேல் ஏந்திய வீரரைக் கோர்தெடுத்தக் கொம்பு உடைய யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்ட போது நரிகள் கொன்று விடும்

ஆகிய இரண்டு குறட்பாக்களை அறிக்கையின் நிறைவில் நீதியரசர் ஆறுமுகச்சாமி குறிப்பிட்டு உள்ளார். அதை உறுதிப்படுத்தும் வகையில், அறிக்கை வெளியான பிறகும் அ.இ.அ.தி.மு.க தலைவர்களும் தொண்டர்களும் அமைதி காப்பதைப் பார்க்கும் போது அம்மையார் மீதான அவர்களின் அக்கறையின்மை தெளிவாகத் தெரிகிறது. இதைப் பார்க்கும் போது “தாசில்தார் வீட்டு நாய் இறந்தால் எல்லோரும் கவலைப்படுவார்கள். ஆனால் அந்த தாசில்தார் இறந்தால் ஒருவர் கூட கவலைப்பட மாட்டார்கள்” என்கிற சொலவடைதான் நினைவுக்கு வருகிறது. முத்தாய்ப்பாக அனைத்திற்கும் பொறுப்பாக சசிகலாவை விட்டு விட்டு ஏதும் சொல்ல முடியாது என்று ஆணையம் புள்ளி வைத்து விடுகிறது.



நீதியரசர் அருணா ஜெகதீசன்



நீதியரசர் ஆறுமுகச்சாமி

அதே போன்று, கடந்த நான்கு ஆண்டு கால விசாரணைக்குப் பிறகு வெளியிடப்பட்ட 3,000 பக்கங்கள் கொண்ட நீதியரசர் அருணா ஜெகதீசன் அறிக்கையில், துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் காவல்துறையினர் 17 பேர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கவும், போராட்டத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய தூத்துக்குடி மாவட்டத்தின் அப்போதைய ஆட்சியர் வெங்கடேஷ் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சம்பவத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்குக் கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை “டிவியில் பார்த்த பிறகுதான் எனக்கே தெரியும்” என்று முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கூறியது அனைத்தும் பொய். தூத்துக்குடி நிலவரங்கள் குறித்து அனைத்து விபரங்களையும் எடப்பாடி பழனிச்சாமிக்கு நிமிடத்திற்கு நிமிடம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றும், பொறுப்பற்று இருந்த எடப்பாடியைச் சுட்டிக்காட்டுவதுடன், “சமூக விரோதிகளால்தான் தூத்துக்குடியில் கலவரம் ஏற்பட்டது என்று தான் கூறியதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை” என்று விசாரணையில் நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார் என்றும், ரஜினிகாந்த் போன்ற பிரபலம் ஒரு கருத்தைத் தெரிவிக்கும்போது அதற்கான ஆதாரத்தை உறுதி செய்திருக்க வேண்டும். தங்களது பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக அன்றைய முதல்வர் பழனிச்சாமி கூறியது பொய் என்பது ஆணைய அறிக்கை மூலம் அம்பலமாகி உள்ளது. அம்மையார் ஜெயலலிதா மரணத்தை முன் வைத்துத் தர்ம யுத்தம் நடத்திய பன்னீர் செல்வம் விசாரணைக்கு வராமல் காலம் தாழ்த்தியதை ஆணைய அறிக்கை சுட்டிக் காட்டி உள்ளது.

இருவரும் ஒன்றிய அரசுக்குக் காவடி தூக்கி தங்கள் ஆட்சி அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதில்தான் முனைப்பு காட்டினார்களே தவிர தங்கள் தலைவியின் உயிர் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் துளியளவும் அவர்கள் மனதில் இல்லை என்பதை ஆணைய அறிக்கை படம் பிடித்துக் காட்டி உள்ளது.

இந்த இரண்டு ஆணைய அறிக்கைகள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதி அளித்துள்ளார். அதன்படி இந்தக் காலக்கட்டங்களில் முதல்வராக இருந்து குற்றவாளிகளுக்கு உறுதுணை புரிந்த முன்னாள் முதல்வர்கள் பழனிச்சாமி மற்றும் பன்னீர் செல்வம் இருவரும் குற்றம் சாட்டப்பட்டவர்களோடு இணைந்து தண்டனைக்கு உள்ளாகும் நாள் வெகு தொலைவில் இல்லை. அப்போதுதான் சாமானியர்களுக்கு நீதித்துறை மீது நம்பிக்கை ஏற்படும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian